Registered as a News Paper  பக்கங்கள் 04  விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily  மக்கள் தினசரி

நாதம் 03  திருவள்ளுவர் ஆண்டு 2203  ஐப்பசி 26  (11-11-1992)  புதன்கிழமை  ஓசை 267

## 97 வீதமான தாய்மாருக்கு இரத்தசோகை நோய்

யாழ். மாநகர் பகுதியில் சுமார் 97 சத வீதமான தாய்மார்கள் பிரசவ காலத்தில் இரத்தசோகை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். நாளாந்தம் இரத்தசோகை நோயினால் பாதிக்கப்படுபவர்கள் எண்ணிக்கை வீதம் அதிகரித்துக் கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இதனால் கருவளர்ச்சிக் காலத்தில் குழந்தைகளின் வளர்ச்சி வெகுவாக குறைகின்றது. எனவே இக் காலத்தில் ஆரோக்கியமான உணவு வகைகளை உண்ண வேண்டும். தற்பொழுது இரும்பு சத்துள்ள மருந்து வகைகள் தட்டுப்பாடாக (4 ஆம் பக்கம் பார்க்க)

# மணலாற்றில் மின்வேக அதிரடி; 7 ராணுவத்தினர் பலி; பலர் காயம்

## புலிகள் தரப்பில் சேதமில்லை

[நமது நிருபர்]

மணலாற்றுப் பிரதேசத்தில் சிறிலங்கா இராணுவத்தின் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மின்னல் வேகத் தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர், பலர் காயங்களுடன் முகாமிற்குத் தப்பி ஓடினர். இத் தாக்குதலின் போது புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

சேமாவில் இராணுவ முகாமிற்கும் தென்னமரவாடிக்கும் இடையில் அமைந்திருந்த காவலரணே புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது நேற்று முன்தினம் மாலை 4-20 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இவ் வெற்றிகரமான தாக்குதல் நான்கு நிமிடநேரம் இடம் பெற்றது.

இராணுவ காவலரண் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது. அங்கிருந்த ஆயுதங்களும் இராணுவ உபகரணங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை இத்தாக்குதலையும் படையினருக்கு ஏற்பட்ட உயிரிழப்பையும் சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் ஒப்புக்கொண்டுள்ளன.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(மணலாறு)

மணலாறுப் பகுதியில் தென்னமரவாடி சிறிலங்கா இராணுவ காவலரண்கள் மீது நேற்று முன்தினம் மாலை விடுதலைப்புலிகள் நடாத்தி வெற்றிகரதாக்குதலில் கைப்பற்றப் பட்ட ஆயுதங்களினதும் இராணுவ உபகரணங்களினதும் விபரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ | ஜி-3 ஏ-3 ரக துப்பாக்கிகள் | — 06 |
| ★ | ரி 56-2 ரக துப்பாக்கி | — 01 |
| ★ | ரி 56-1 ரக துப்பாக்கிகள் | — 02 |
| ★ | நேட்டோ ரவைகள் | — 836 |
| ★ | நடுத்தர ரவைகள் | — 574 |
| ★ | ஜி-3 ஏ-3 மகசின் | — 34 |
| ★ | ஏ கே மகசின் | — 15 |
| ★ | ஏகே கோல்சர் | — 10 |
| ★ | கறுப்பு ஜே. ஆர். கைக்குண்டு | — 12 |
| ★ | தொலைத் தொடர்பு சாதனம் | — 01 |
| ★ | கிட்பாக் | — 07 |
| ★ | மில்றி பெல்ட் | — 04 |
| ★ | தொப்பி | — 01 |
| ★ | தண்ணீர்க்கான் | — 01 |
| ★ | தண்ணீர்க்கான் கோல்சர் | — 01 |

## லீவில் செல்லும் படையினர் சொந்த செலவில் செல்லவேண்டும்

(கொழும்பு)

லீவு மற்றும் தேவைகளுக்காக போர்முனைகளிலிருந்து ... மதிக்கப்படுகின்றனர்.

முன்னர் வடக்கு, கிழக்கு போர் முனையிலிருந்து வீடு ... இதனால் இடையூறு இருந்ததாகவும் இதற்காகவே இந் நடைமுறை மாற்றி அமைக்

## வீரச்சாவு



## அலங்கார வளைவுகள் அமைக்கும் பணி ஆரம்பம்

(நமது நிருபர்)

மாவீரர்களை நினைவு கூருமுகமாக யாழ். குடாநாட்டின் வீதிகள் தோறும் அலங்கார வீதி வளைவுகள் அமைக்கும் பணியில் இளைஞர்கள் சுறு சுறுப்பாக ஈடுபட்டு வருவதனை அவதானிக்க முடிகிறது.

தமிழீழ விடுதலைக்காக தம் உயிர் ஈர்ந்த மாவீரர்கள் நினைவாக தமிழீழ மாவீரர் வாரம் தமிழீழமெங்கும் மிக வும் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளன. எதிர் வரும் 21-ம் திகதி முதல் 27-ம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ள அம்மாவீரர் வாரத்தை முன்னிட்டே பிரதான வீதிகள், பொது இடங்கள் ஆகியன துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன இதே வேளை சித்தன்கேணி, சங்கானை, ஆனைக்கோட்டை ஐந்துசந்தி (4 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் எழுச்சி வாரம் நவம்பர் 15இல் ஆரம்பம்

மாவீரர் எழுச்சி வாரம் தமிழீழமெங்கும் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தமிழீழ விடுதலைக்காக தம்முயிர் ஈர்ந்த மாவீரர்களை நினைவுகூரும் நாளிற்கு எழுச்சியூட்டும் வகையில் மாவீரர் வாரத்திற்கு முன்னோடியாக இம் மாவீரர் எழுச்சி வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இக் காலப்பகுதியில் தமிழீழத்தின் அனைத்து வட்டவைப் பகுதிகளிலும் இரண்டு எழுச்சிக் கூட்டங்கள் நடாத்தப்படவுள்ளதாக நேற்று யாழ். மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் திரு இளம்பரிதி தெரிவித்தார்.

இவ் எழுச்சி வாரத்தில் தமிழீழ மக்கள் அனைவரும் வீதிகள் குடியிருப்புகள் பொது இடங்கள் ஆகியவற்றை துப்புரவு செய்தல் வீதிகள் தோறும் மாவீரர் வளைவுகள் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்வர் எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழீழ மாணவர் அமைப்பு எதிர்வரும் 15-ம் திகதி முதல் 21-ம் திகதி வரையான வாரத்தை மாவீரர் எழுச்சிவாரமாக கோட்ட ரீதியாக அனுஷ்டிக்கவுள்ளது 15 திகதி தென்மராட்சிக் கோட்டத்திலும், 16-ம் திகதி வடமராட்சிக் கோட்டத்திலும் 17-ம் திகதி யாழ். தீவககோட்டங்களிலும் 18-ம் திகதி பண்டத்தரிப்பு கோட்டத்திலும் 19-ம் திகதி பல்கலைக் கழகத்திலும் 20-ம் திகதி மருதனார் மடக்கோட்டத்திலும் 21-ம் திகதி தொழில் நுட்பக் கல்லூரியிலும் இவ் எழுச்சிவார நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. கோட்டரீதியாக மாணவர்கள் சிரமதானப் பணிகளில் ஈடுபடவுள்ளனர். (ச)

## புலிகளை வெல்லமுடியாது அரசு ஏற்றுக்கொள்கிறது

### சாமிந்திர பெர்டினன்டோ

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இராணுவரீதியான வெற்றி பெறப்பட முடியாது என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தொடங்கியிருக்கிறது போல் தெரிவதாக ஐலண்ட வார இதழின் பத்தி ... களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் தொடர்கின்ற போதிலும் வடக்கு, கிழக்குப் பகுதியில் அவர்களை வெற்றி கொள்ள முடியாது போயுள்ளது என்றும். அங் ... வார்.

கொப்பேகடுவ, விஜய விமலரட்ணா போன்றோரின் மரணத்திற்குப் பின்னர் பெரிய அளவில் இராணுவ நடவடிக்கை எதையும அரசாங்கம்

காக போர்முனைகளிலிருந்து திரும்பிச் செல்லும் இராணுவத்தினர் தற்போது அநுராதபுரம் வரை மட்டுமேவிமானத்தில் கொண்டு செல்லப்படுகின்றனர் பின்னர் அங்கிருந்து தத்தம் இடங்களுக்கு பஸ்கள் மூலம் பயணம் செய்ய அனு

முன்னர் வடக்கு, கிழக்கு போர் முனையிலிருந்து வீடு திரும்பும் இராணுவத்தினர் இரத்மலானை விமான நிலையத்திலேயே விடப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது காயமடைந்து வருவோர், மற்றும் அவசர பயணங்கள் என்பவற்றை ஒழுங்கு செய்வதற்கு

தாகவும் இதற்காகவே இந் நடைமுறை மாற்றி அமைமக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது இதே போல லீவு முடித்து போர் முனைக்கு திரும்புவோரும் அநுராதபுரத்திற்கே வரும்படி கேட்கப்பட்டு உள்ளனர்.

# வடக்குகிழக்கில்பொலிசாருக்கு 6 மாத கால கட்டாய சேவை

## கடமைக்கு செல்லாவிடில் பதவி பறிபோகும்

(கொழும்பு)

வட-இழக்கிற்கு கடமைக்கு செல்ல மறுக்கும் பொலிசாரினது பதவிகள் பறிபோகும் என சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு கிழக்கு பொலிஸ் நிலையங்களுக்கு இடமாற்றலாகும் பொலிசார் அங்கு ஆறுமாதங்கள் கடமையாற்ற வேண்டும். மறுப்போர் பதவியிலிருந்து தாமாகவே விலகியவர்களாக கருதப்படுவார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் ''தாக்குதல் பகுதி'' என பிரகடனப் படுத்தப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலை

(4 ஆம் பக்கம் பார்க்க)



கப். மதியழகன்

கிளாலி கடல் பகுதியில் கடற்படையினருடன் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் போராளி கப்டன் மதியழகன் (மகவன் — நடராசா ரஜிஸ்குமார் புதுக் கலட்டி அல்வாய் தெற்கு) வீரச்சாவு அடைந்தார்.

இவருக்குத் தமிழீழ விடுத

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஐலன்ட வார இதழின் பத்தி எழுத்தாளர் சாமிந்திர பெர்டினன்டோ கட்டுரை யொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கட்டுரையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்; பல வருடங்களாக விடுதலைப் புலி

போயுள்ளது என்றும், அங்கொன்று இங்கொன்றாசில வெற்றிகள் பற்றி அரசாங்கம் கூறிக்கொண்டாலும் விடுதலைப்புலிகள் தமது வலிமையை எவ்வகையிலும் இழக்கவில்லை என்றும் கூறியுள்

க்கை எதையும அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்றும் மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகள் அளவில் சிறியன என்பதோடு விடுதலைப் புலிகளைஎவ்வகையிலும் அவைபா

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு பறிபோய் விட்டது கிழக்கையாவது காப்பாற்ற வேண்டும்

## - தயான் ஜெயத்திலக்கா

(கொழும்பு)

வடக்கு பறி போய்விட்டது, மீளப்பெறமுடியாது. ஆனால் கிழக்கு மாகாணத்தைப் புலிகளிடமிருந்து காப்பாற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தயான் ஜெயத்திலக்கா கூறியுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சரும், பிரேமதாசா அரசாங்கத்தின் அரசியல் ஆலோசகர்களில் ஒருவருமான தயான் ஜெயத்திலக்கா இது பற்றி மேலும் கூறுகையில், வடக்கையும், கிழக்கையும் இணைப்பது என்பது பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கும் ஐ.தே. கவிற்கும் ஏற்புடையதல்ல. அந்த வகையில் கொழும்பிலுள்ள தமிழ்க்கட்சிகள் சிந்திக்க முன்வர வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்த வகையில் வடக்கு எப்படிப் போனாலும் பரவாயில்லை, கிழக்குப் புலிகளிடமிருந்து காப்பாற்ற தமிழர் குழு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கிற்கு செல்ல விரும்பாது 407 ஊர்காவற்படை ஓட்டம்

(கொழும்பு)

மாத்தளைப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த ஊர்காவற்படையினர் 407 பேர் இரு வேறு சந்தர்ப்பங்களில் கிழக்கு மாகாண எல்லைக் கிராமங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட போது வேலையிலிருந்து விலகியுள்ளனர்.

மாத்தளை பொலிஸ் ஊர்காவற்படை பிரிவொன்றைக் கிழக்கு யுத்தமுனைக்கு அனுப்புவதென்று பொலிஸ் தலைமைப்பீடம் கடந்த மாதம் முடிவெடுத்திருந்தது. இந்த இடமாற்றத்தை விரும்பாத அப்பிரிவைச் சேர்ந்த ஊர்காவற்படையில் 177 பேர் பதவியிலிருந்து விலகியுள்ளனர். 50 பேர் மட்டும் இடமாற்றக் கட்டளையை ஏற்று யுத்த முனைக்குச் சென்றுள்ளனர்.

மற்றொரு சந்தர்ப்பத்தில் சென்ற மாதம் மாத்தளைப் பொலிசைச் சேர்ந்த இன்னுமொரு ஊர்காவற்படைப் பிரிவிற்கு கிழக்கு மாகாண எல்லைக் கிராமங்களுக்குச் செல்ல உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்தப் பிரிவைச் சேர்ந்த 230 ஊர்காவற்படையினர் தமது ஆயுதங்களைக் கையளித்துவிட்டு வேலையிலிருந்து விலகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் தீவில்

# முஸ்லிம் ஊர்காவல்படை ஆயுதம் ஒப்படைப்பு

மன்னாரில் 120 ஊர்காவற்படையினர் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு விலகியுள்ளது பெரும் ஏமாற்றத்தைத் தருவதாகும் என்று சபாநாயகர் எம். எச் முகமெட் தெரிவித்துள்ளார்.

சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கியுள்ள பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

முஸ்லிம் கிராமங்களில் பாதுகாப்புக்கு என அமைக்கப்பட்ட கண்காணிப்புக்குழுக்கள் மற்றும் ஊர்காவற் படைக்கு போதிய பயிற்சி இல்லை. தாக்குதல்களின் போது ஆயுதங்களை இழந்து நிர்க்கதியாகி உள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பொலிஸ் திணைக்கள அமைப்பில் மாற்றம்

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தின் உயர் மட்டத்தில் முக்கிய மாற்றங்கள் இவ் வருட இறுதியில் மேற்கொள்ளப்படலாம் என்று தெரியவந்துள்ளது. இதில் குற்றத் தடுப்பு புலனாய்வு பிரிவு மீண்டும் புனரமைக்கப்பட இருப்பது முக்கியமானதாகும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. இப்பிரிவு 1987 ஜனவரியில் அமைக்கப்பட்டு பின்னர் ஜே வி. பி யினருக்கு எதிரான நடவடிக்கையின் போது விரிவுபடுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. எப்பகுதியிலும் சென்று செயற்படக்கூடிய இப்பிரிவு தகவல் சேகரிப்பு, குற்றங்கள் பற்றிய புலன் விசாரணை என்பவற்றிற்கு பொறுப்பாக இருந்தது.

இதே போல தகவல் சேகரிப்பு பிரிவும் மீண்டும் செயற்படவுள்ளது.1987 ஆம் ஆண்டு வரை பொலிஸ்மா அதிபரின்

4 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கு படையினர் கட்டுப்பாட்டில் என்பது கேள்விக்குரியது

## ஐலன்ட் தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் படையினர் மீது விடுதலைப் புலிகள் அடிக்கடி நடத்தி வரும் தாக்குதல்களால் இராணுவம் கிழக்கு மாகாணத்தில் மேலோங்கிய நிலையில் இருக்கின்றது என்ற கணிப்பீடு கேள்விக்கு உள்ளாகி வருகின்றதுஎன்று ஐலன்ட் பத்திரிகையின் பத்தி எழுத்தாளர் சாமிந்திர பெர்டினன்டோ குறிப்பிட்டுள்ளார்.

அவர் தமது கட்டுரையில் மேலும் குறிப்பிடுகையில், கிழக்கு மாகாணத்தில் அரச படைகளின் கட்டுப்பாட்டுப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

காளிதாஸ் தலைமையில்

# தேசிய இராணுவத்தினர் படையில் இணைப்பாம்

ஈ. என். டி. எல். எவ். குழு ''இராணுவப் பிரிவைச்'' சேர்ந்த காளிதாஸ் சிறிலங்கா இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கிலும், கிழக்கிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் சண்டை செய்ய காளி

[4 ஆம் பக்கம் பார்க்க]

# அம்பாறை மாவட்டத்தில் 100க்கு மேற்பட்டோர் கைது

[அம்பாறை]

அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ்க் கிராமங்களை சுற்றிவளைத்த சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் நூற்றுக்கு மேற்பட்ட பொது மக்களைக் கைது செய்துள்ளனர்.

திருக்கோவில் சிறிலங்கா இராணுவமுகாம் விசேட அதிரடிப் படையினர் தமிழர்கள் செறிவாக வாழும் கிராமங்களை சுற்றி வளைத்து 95 பேரைக் கைது செய்தனர். பல மணி நேரம் தடுத்துவைக்கப்பட்டு விசாரணையை மேற்கொண்ட படையினர் 12

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### உடன் விற்பனைக்குண்டு

கறுப்பு + பிறவுண் சேவல்குஞ்சுகள் உடன்விற்பனைக்குண்டு தொகையாக பெற்றுக்கொள்ளுபவர்களுக்கு விசேட கழிவுண்டு ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய் (3220)

### விற்பனைக்கு

Prima + Bahira Hy–Line Christombu. பிறிமா + பகிரா + கைலைன் + கிறிஸ்தம்பு ஆகிய இன பேட்டு குஞ்சுகள் + புறோயிலர் குஞ்சுகளுக்கும் தொடர்பு கொள்ளவும் மல்லிகாபதி சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய் [3221]

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி (சி-5152)

### பற் சிகிச்சை நிலையம்

பற் சிகிச்சை நிலையம், (கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிரில் கே. கே எஸ். வீதி, கொக்குவில் தினசரி; 4 பி. ப. — 6 பி. ப ஞாயிறு; 10 மு. ப. — 2 பி. ப. (3215)

### தென்னங்கன்றுகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வீட்டு வளவிலோ அல்லது தோட்டத்திலோ நடுவதற்குத் தேவையான நல்லின தென்னங் கன்றுகள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

தேவையானோர் குடாநாட்டில் உள்ள கமநலசேவை நிலையங்களில் அல்லது தென்னைப் பயிர்ச்செய்கை சபையைச் சேர்ந்த நல்லூர் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் இவற்றை பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (42)

### மரக்கன்றுகள் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

உரும்பராயில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் அமைக்கப்பட்டுள்ள கம

### மாணவ வழிகாட்டி

1992 கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் சாதாரண தரம் தேர்விற்குத் தோற்றும் மாணவ சமுதாயத்திற்கான வழிகாட்டி சித்திரம் (ஆண்டு 11 ஆக்கம் 'யசோ' (ஆசிரியர்—சித்திரம் வினா விடை) எங்கும் கிடைக்கும். (3616)

### தவறிவிட்டது

07. 10. 92 அன்று செ. தாமோதிரம்பிள்ளை (வல்வெட்டி) என்பவருடைய பச்சை நிற பிரயாணப்பை ஒன்று கொழும்பிலிருந்து வரும் போது நல்லூரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (3620)

### ஜாம் வெற்றுப் போத்தல்கள் தேவை

ஜாம் வெற்றுப் போத்தல்கள் உடனடியாகதேவை நியாயமான விலைக்கு பெற்றுக் கொள்ளப்படும். வேலவன் ஸ்ரோர்ஸ் நல்லூர் கோயில் முன்பாக (3621)

### உதவிப்பண விண்ணப்பங்களை அனுப்பவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக மாணவர் உதவிப்பண (BURSARY) விண்ணப்பப்படிவங்கள் யாவும் இம் மாதம் 30-ம் (30-11-92) திகதிக்கு முன்னர் கிராம சேவையாளர் ஊடாக அனுப்பி வைக்கும்படி பல்கலைக் கழக உதவிப்பதிவாளர் பிரிவு அறிவித்துள்ளது.

இவ் உதவிப்பண விண்ணப்பம் அனுப்பப்படும் பொழுது யாழ். செயலகத்தில் இருந்து பெறப்பட்ட இளைப்பாற்றுச் சம்பளப்பட்டியல், மரணச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ் என்பன இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மேலும் மாணவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது விண்ணப்பதாரரால் தெரிவு செய்யப்பட்டுள்ள பாடநெறியும். மாணவர், தந்தை, தாய் என்பவர்களின் முழுப்பெயர்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் தெளிவாக எழுதப்படவேண்டும். மேலும் கூடு இல. 13: இல் இலங்கைப்பிரசையா இல்லையா என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

மேலும் கிராமசேவையாளரால் இவ் விண்ணப்பப்படிவம்

# ரோகணாவின் நினைவு நாளில் மனித சங்கிலிப் போராட்டம்

(கொழும்பு)

ஜே. வி. பி. இயக்கத் தலைவர் ரோகணவிஜேவீராவின் மறைவு தினமான வரும் 13ஆம் திகதி சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் வேறுசில இடதுசாரிக் கட்சிகளும் கைகோர்த்து நிற்கும் இயக்கம் ஒன்றை நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளனர்.

இந் நடவடிக்கையானது மீண்டும் நாட்டில் வன்செயலையும், அச்சத்தையும் ஏற்படுத்தும் நோக்கத்துடன்மேற்கொள்ளப் படுகின்றதா என சில எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பி உள்ளன.

இது தொடர்பாக ஒஸி அபயகுணசேகரா தெரிவிக்கையில்; பயங்கரவாதம் நிலவிய காலகட்டத்தில் இடதுசாரித் தலைவர்கள் ஆயுதங்களைப் பெற்றுக்கொண்டனர் இவ் ஆயுதங்கள் மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்காகவா பெற்றுக்கொள்ளப்பட்டன என கேள்வி எழுப்பியதுடன் இந்த ஆயுதங்கள் மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

### விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(மானிப்பாய்)

நவாலியில் அனாதைச் சிறுவர்களுக்காகவும் வசதி குறைந்த பிள்ளைகளுக்காகவுமென உருவாக்கப்பட்டு இயங்கிவரும் ''மகேஸ்வர இல்லத்தில்'' புதிதாக சிறுவர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவ்விண்ணப்பங்கள் யாவும் இம்மாத இறுதிக்குள் மகேஸ்வர இல்ல பொறுப்பதிகாரியான சைவப்புலவர் அம்பலவாணர்கந்தையாவிடம் நேரடியாக சமர்ப்பிக்கும்படி விண்ணப்பதாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள் விண்ணப்ப முடிவு திகதிதேவையாயின் நீடிக்கப்படும் என சைவப் புலவர் கருத்து தெரிவித்தார்.

காலம் சென்ற மகேஸ்வர முதலியாரின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட இந் நிறுவனம் தற்பொழுது பலரின் உதவியினைப் பெற்று இயங்குகின்றது இந் நிறுவனத்தின் நோக்கம் அனாதைச் சிறுவர்களை பராமரித்து அவர்களை சமூகத்தின் உயர்ந்த நிலைக்கு கொண்டுவருவதாகும். இச் சிறுவர்களுக்கு உதவி செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் சைவப் புலவர் அம்பலவாணர் கந்தையாவிடம் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

### கருத்தரங்கு

யாழ் நாயன்மார்கட்டு சன சமூக நிலையத்தில் இன்று மாலை 6 மணியளவில் ''கல்வியே கருத்தரும்'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு நடைபெறவுள்ளது. யாழ்.

### ஆசிரியர்களும் சைக்கிள் கொண்டுவரத் தடை

(வவுனியா)

பாடசாலை ஆசிரியர்கள் இராணுவ அனுமதி பெற்று வடபகுதி நோக்கி சைக்கிள் கொண்டுவருவதற்கும் தாண்டிக்குளம் சோதனைமுகாம் இராணுவம் தடை விதித்துள்ளது.

வடபகுதி நோக்கி சைக்கிள் கொண்டுசெல்வதற்கு இராணுவம் தடைவிதித்திருக்கின்றபோதிலும் ஆசிரியர்கள் இராணுவ அனுமதி பெற்று சைக்கிள் கொண்டு செல்வதற்கு சோதனை முகாம் இராணுவம் சம்மதித்திருந்தது.

சமீப நாட்களாகபாடசாலை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருந் இந்தச் சலுகை நிறுத்தப்பட்டுள்ளது.

இராணுவத்தின் இத் தடை உத்தரவினால் பாடசாலை ஆசிரியர்கள் பாதிப்படைந்துள்ளனர். (தி)

அரசாங்க அறிவித்தல்

சுகாதாரத் திணைக்களம் - யாழ்ப்பாணம்

### மரத்தளபாடம் வழங்கல்

கீழே விபரிக்கப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட (Sealed) கேள்விப்பத்திரங்கள் என்னால் 16-11-92 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. மேசை இரண்டு லாச்சி $4\frac{1}{2}' \times 2\frac{1}{2}' \times 2\frac{1}{2}'$ (முதிரை) - 50
2. பணப்பெட்டி வைப்பதற்கான ஸ்ரான்ட் (முதிரை) $2'5'' \times 1'9'' \times 1'9''$ (Stand for Iron Save) - 01
3, எண்ணெய்பரல் வைப்பதற்கானஸ்ரான்ட் (முதிரை) - 01 (Stand for Fuel Barrel)
4. தட்டெழுத்தாளர் மேசை $4' \times 2' \times 2^1/_2'$ (முதிரை) - 03
5. தட்டெழுத்தாளர் கதிரை (முதிரை) - 03
6. கரும்பலகை (முதிரை) $6' \times 4'$ - 10

மேற்படி கேள்விப் பத்திரங்கள் உங்களால் தயாரிக்கப்பட்டு உறையில் இடப்பட்டு அரக்கு முத்திரை இடப்படல்வேண்டும் அத்துடன் அவ்வுறையின் இடது பக்க மேல் மூலையில் ''யாழ். சுகாதார திணைக்களத்திற்காக மரத்தளபாடங்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள்'' என்று குறிப்பிடல் வேண்டும். இப்பத்திரங்கள் என்னால் 16-11-92 ஆம் திகதி பிற்பகல் 2 00 மணிக்கு திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிப்பவர்கள் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது சமுகமளிக்கலாம். அல்லது எழுத்துமூலமான அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரை அனுப்பலாம், ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரர்கள் 21-12-92 ஆம் திகதிக்கு முன் தளபாடங்களை வழங்கவேண்டும். இத் தளபாடங்களின் மாதிரிகளை பார்வையிட விரும்புவோர் 13.11.92 ஆம் திகதி காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

வைத்திய கலாநிதி பொ. இரத்தினசபாபதி

# சோற்றுப் பார்சலுக்குள் கைவிரல் துண்டு

(கொழும்பு)

கொழும்பு ஹோட்டல் ஒன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட சோற்றுப் பார்சலுக்குள் மனித கைவிரல் துண்டு ஒன்று இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாளிகாவத்தைப் பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் வாங்கிய சோற்றுப் பார்சலுக்குள்ளேயே இக் கைவிரல் துண்டு காணப்பட்டதாக பொலிசாருக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஹோட்டல் மூடப்பட்டு சீல்வைக்கப்பட்டதுடன் அங்கு வேலை செய்த எட்டுப் பேரும் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

45ஆம் நாள்

## நினைவலைகள்

| தோற்றம்: | வீரச்சாவு: |
| --- | --- |
| 01 | 28 |
| — | — |
| 4 | 09 |
| — | — |
| 1974 | 1992 |



### லெப. கோமகன்

[பிலிப் பிறேமானந்தன் (கலீல்) ]

(மணலாறுப் பகுதியில் சிறிலங்காப் படையினரின் சமரில் வீரச்சாவெய்தியவர்)

உதடுகள் புன்சிரிப்பும்
உயர்ந்த உன் தோற்றமும்
துணிவான உன் நடையும்
கனிவான உன் பேச்சும்
எங்கள் நெஞ்சில் நிறைந்துள்ளதடா
எங்கள் செல்வமே தாயகத்தின்
விடிவிற்காய் தாயன்பைத் துறந்து
தியாகத்தின் எல்லைக்குச் சென்றுவிட்ட
தியாகியே நாற்பத்தைந்து நாள்
சென்றாலும் உமது நினைவு
எம்மை விட்டு நீங்காது.

சந்தா தோட்டம்,
பருத்தித்துறை
(3614)

உன் பிரிவால் வாடும்
சித்திமார், உடன்பிறப்புக்கள்,
சித்தப்பாமார், அண்ணாமார்,
மற்றும் உறவினர், நண்பர்கள்.

## நினைவு கூருகின்றோம் ...

### 1992-11-11

1986ஆம் ஆண்டு பருத்தித்துறைப்பகுதியில் நிகழ்ந்த நேரடிச் சமரினை தொலைக்காட்சிக்காகப் படம் பிடிக்கும் போது வீரச்சாவெய்திய-

**பட்டேல்** (தில்லையம்பலம் ரகுபதி - பொலிகண்டி, வல்வெட்டித்துறை - யாழ். )

பருத்தித்துறை முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்காப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

ரால் அமைக்கப்பட்டுள்ள கமக்காரர் பணியகத்தில் பலஇன மரக்கன்றுகளை வழங்கும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது மக்களுக்கு வேண்டிய பயன் தரு மரங்கள் பல இங்கு விநியோகிக்கப்படுகின்றன. [42]

ரால் இவ் விண்ணப்பப்படிவம் உரிய காலத்தில் அனுப்பப்பட்டதற்குஅத்தாட்சியாக,தபாற்கந்தோர் பதிவு இலக்கங்களை குறிப்பிட்ட மாணவருக்கு தவறாது அனுப்பி வைத்தல் வேண்டும என செயலகப்பிரிவு அறிவித்துள்ளது.

நடைபெறவுள்ளது. யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் எஸ். சண்முகராஜா அவர்கள் கருத்துரை வழங்குவார். இதற்கு முன் இந்த நிலையத்தினை ஆரம்பிப்பதற்கு உதவிய பெரியார் சு சிவகுருநாதன், மாவீரர் கப்டன் அருந்ததி ஆகியோரின் உருவப்படங்கள் திறந்து வைக்கப்படும்.

வைத்திய கலாநிதி பொ. இரத்தினசபாபதி
சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர்

சு. சே. பி. ப. பணிமனை,
57, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்,
06-11-92.

(சி-5372)

## தமிழ்க் குழுக்களுக்கு ரி-56
## ஊர்காவல் படைக்கு 'கெட்டப்போல்'

ஈ. பி. டி. பி. மற்றும் புளொட் போன்ற தமிழ்க் குழுக்களுக்கு ரி - 56 தன்னியக்க துப்பாக்கி உட்பட நவீன ஆயுதங்கள் வழங்கப்பட்டிருக்கையில் ஊர்காவல் படையினருக்கு 'கெட்டப்போல்' தான் வழங்கப்படுகிறது என்றுபாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## வீடமைப்பு நிவாரணம் 40 பேருக்கு கிடைத்தது

[வடமராட்சி]

வடமராட்சிப் பகுதியில் வறுமைக் கோட்டின்கீழ் உள்ள 40 பேருக்கு வீடு கட்டுவதற்கான முதலாவது கட்ட நிவாரணத்தை யாழ் மாவட்ட தேசியவீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட முகாமையாளர் திரு. த.பூ. முருகையா வழங்கினார்.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை நகரசபை பிரிவுக்குள் 18 வட்டாரங்களில் 29 பேருக்கு மீளளிக்கப்படாத முதற் கட்ட நிவாரணத்தை மாவட்ட முகாமையாளர் திரு. த.பூ. முருகையா சம்பந்தப்பட்ட வீடுகளைப் பார்வையிட்ட பின்னர் அந்தந்தப் பகுதி நகரசபை அலுவலகங்களில் வைத்து வழங்கினார்.

நகரசபைக்குட்பட்ட வீடு ஒன்றை நிர்மாணிக்க 8,500 ரூபாவும் பிரதேச செயலாளர் பிரிவில் வீடு ஒன்றை நிர்மாணிக்க 5,000 ரூபாவும் வழங்கப்படும் நகரசபைப் பிரிவில் வீடு கட்டுவதற்கு முதற் கட்ட நிவாரணமாக மூவாயிரம் ரூபாவும் பிரதேச செயலக பிரிவில் இரண்டாயிரம் ரூபாவும் முதற் கட்டமாக வழங்கப்பட்டன. மூன்று கட்டங்களில் இந் நிவாரணம் வழங்கப்படும்.

மற்றும் மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவில் 11 பேருக்கும் முதற் கட்ட நிவாரணமாக இரண்டாயிரம் ரூபா அப்பகுதி அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டன வீடு கட்டத் தகுதியான மிகுதியானோருக்கும் இதனைத் தொடர்ந்து வழங்கப்படும்.

இராணுவ நடவடிக்கையால் ஏனைய பிரிவுகளில் வீடுகளைக் கட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் அப் பணத்தை பயன் படுத்தி வடமராட்சிப் பகுதியில் மேலும் 20 பேருக்கு இந் நிவாரணம் வழங்க மாவட்ட முகாமையாளர் திரு த. பூ. முருகையா நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

வீட்டுத் திட்ட நிவாரண நடவடிக்கைகளின் போது மேற்குறித்த பகுதிகளைச் சேர்ந்த வீடமைப்பு உத்தியோகத்தர் திரு. காசிலிங்கம் மாவட்ட முகாமையாளருடன் இணைந்து செயற்பட்டார்.

(யோ)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்: 03-07-1968

வீரச்சாவு: 11-11-1988

**கப்டன் சரத்பாபு**

(நாகராஜேஸ்வரன் சயந்தசிறி)

*[11-11-1988 அன்று யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டிச் சந்தியில் இந்திய இராணுவத்தினரும், தேசவிரோதிகளும் இணைந்து மேற்கொண்ட சுற்றி வளைப்பில் வீரச்சாவு.]*

வீரவேங்கையே!

நம்பியிருந்த தேவர்களாலேயே நயவஞ்சகமாக தீர்த்துக் கட்டப்பட்டவனே!
ஆயுதத்தை புல்லாங்குழலாக்கி கையிலேந்தியவனே!
உன்னை வாசிக்க விரும்பியிருந்த உதடுகளெல்லாம் விதவைகளாகி விட்டனவே
என்செய்வோம் இனி, ஒன்று சொல்வோம உனக்கு

இலையுதிர் காலமென்பது மரத்தை படவைப்பதற்கான படையெடுப்பல்ல
மற்றுமோர் சந்ததித் தளிருக்கான சாந்தி முகூர்த்தமே!
அதுபோல்
உனது வீரச்சாவும் ஆயிமாயிரம் வேங்கைகளை கோற்றுவிக்கும். உனது உன்னத இலட்சியமான சுதந்திர சோஷலிச தமிழீழம் மலரும். இதை நிச்சயம் நீ, உனது சக மாவீரர்களுடன் விண்ணிலிருந்து கண்டு மகிழ்வாய்.

''சயந்தன்ஸ்''
27/10, சயந்தசிறி வீதி,
பாண்டியன் தாழ்வு,
சுண்டிக்குளி. யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(சி-5383)

திய-

**2-ம் லெப். பவான்** (விக்டர் பஞ்சாட்சரநாதன் - தொண்டமானாறு- யாழ்.)

**லெப். அப்துல்லா** (இ. கிருஷ்ணானந்தன் - திருக்கோணமலை)

**சிவன்** (குட்டித்தம்பி சிவகுமார் - சின்னக்கடற்கரை தொண்டமானாறு- யாழ்.)

1987-ம் ஆண்டு கோண்டாவில் பகுதியில் இந்தியப் படையினர் கைது செய்த போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**குட்டி** (துரைசாமி கிருபாகரமூர்த்தி - குமரகோட்டம், கோண்டாவில் - யாழ்.)

சுதுமலைட்பகுதியில், இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். சுபாஸ்** (சண்முகம் வனந்தரன் - பொன்னாலை தெற்கு - யாழ்.)

யாழ்ப்பாணம் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**வின்சன்** (சூசைப்பிள்ளை - கன்னாட்டி- மன்னார்)

நெடுங்கேணிப்பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட 3 - தமிழ்ப்பொதுமக்கள்

1988-ம் ஆண்டு, வட்டக்கச்சிப் பகுதியில், இந்தியப் படையினருடனான சமரில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**விஜய்** (யோகநாதன் ஞானசம்பந்தன் - இரத்தினபுரம்- கிளிநொச்சி)

யாழ். கஸ்தூரியார் வீதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**கபடன் சரத்பாபு** (நாகராஜேஸ்வரன் சயந்தசிறி - 'சயந்தன்ஸ்', சயந்தசிறி வீதி, பாண்டியன்தாழ்வு. யாழ்.)

மன்னாரில், தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட எமது ஆதரவாளரான உயர்வகுப்பு மாணவன் -

யாழ்ப்பாணத்தில், தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட-

நாட்டுப்பற்றாளரான-

**ஆசிரியர்- பாலகிருஷ்ணன்**

1989-ம் ஆண்டு தென்னன் மரவடிப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**இதயன்** (சீனித்தம்பி மகாலிங்கம் - கொக்குத்தொடுவாய்- மணலாறு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5385)

### சிந்தனைக்கு

லண்டன் நகரத்தில், கட்டடங்கள் உயர்ந்து கொண்டே போசமளவுக்கு ஒழுக்கம் தாழ்ந்து கொண்டே போகிறது.

- நோயல் கவர்ட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 11-11-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## பிரிட்டனின் போலித்தனம்

சிறிலங்காவிற்கான ஆயுத விற்பனைக்கு பிரிட்டன் அரசாங்கம் விதித்திருந்த தடை இப்பொழுது நீக்கப்பட்டிருப்பதாக அறிவித்துள்ளது ஆயினும் சில கட்டுப்பாடுகளுடன் கூடிய ஆயுத விற்பனையே இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது

இதன் பிரகாரம் யுத்தத்தில் நேரடியாகப் பாவிக்கப்படக் கூடியதும், பேரழிவை ஏற்படுத்தக் கூடியதுமான ஆயுதங்கள் சிறிலங்காவிற்கு விநியோகிக்கப்பட மாட்டாது என்றும், விமானங்கள் கவசவாகனங்கள், உதிரிப் பாகங்கள் மட்டுமே விநியோகிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளதோடு சிறிலங்காவிற்கான ஆயுத விற்பனை அது மனித உரிமைகளைப் பேணுவதைப் பொறுத்தே இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் சிறிலங்காவிற்கு பிரிட்டன் ஆயுதம் வழங்காததினால் சிறிலங்கா இராணுவம் பெரும் தடங்கல்களை எதிர்நோக்கியது என்று சொல்ல முடியாது. அண்மையில் சிறிலங்காவின் பிரதான ஆயுதவிநியோகஸ்தர்களாகசீனாவும்கிழக்குஐரோப்பிய நாடுகளுமே உள்ளன அவை இன்றும் தேவையான ஆயுதங்களை வழங்கத் தயாராகவுமேயுள்ளன. ஆனால் ஆரம்பத்தில் பிரிட்டனிடம் கொள்வனவு செய்த சில ஆயுதத் தளபாடங்களுக்கு உதிரிப் பாகங்கள் இன்றி அவற்றைப் பயன்படுத்த முடியாமல் போன நிலை ஒன்றே உருவாகியிருந்தது

இதேவேளை பிரிட்டன் சிறிலங்காவிற்கு ஆயுதம் வழங்க முற்பட்டுள்ளமையும் அவற்றிற்குக் கூறிக் கொண்டுள்ள காரணங்களும் ஏமாற்றுத்தனமானதாகும். அதாவது போரில் நேரடியாகப் பயன்படுத்த முடியாத விமானங்கள், கவச வாகனங்கள் என்பனவற்றையே விநியோகிக்கிறோம் என்ற பிரிட்டனின் வாதம் ஏற்புடையதொன்றல்ல.

சிறிலங்கா விமானப்படை பயன்படுத்தி வரும் விமானங்களில் சியாமா செட்டி, எவ் -7 ரக விமானங்களைத் தவிர அவ்ரோ, வை - 12, வை- 8 விமானங்கள் யாவும் பயணிகள் விமானங்களே. இவற்றை சிறிலங்கா அரசாங்கம் முற்றுமுழுதாக இராணுவத் தேவைக்கே பயன்படுத்துகின்றது, இராணுவத்திற்கு பொருள்கள் விநியோகிப்பதில் இருந்து குண்டு வீசுவதுவரை அவற்றின் பயன்பாடு உள்ளது. அத்தோடு, பல சரக்குக் கப்பல்களைக் கூட சிறிலங்கா அரசாங்கம் யுத்தக் கப்பல்

# போர்விமானங்கள் கொள்வனவு பாவனை; தளபதிகள் - அதிகாரிகள் முரண்பாடு

## பாதுகாப்பு வட்டாரத்தில் புதிய சிக்கல்

அரசியல் லாபம் கருதி அரசாங்கம் வேண்டுமென்றே வடக்குக் கிழக்குப் போரை இழுத்தடித்து வருகிறது என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்துகின்ற அதேவேளை படைத்தளபதிகளுக்கும் - பாதுகாப்பு அமைச்சுக்குமிடையிலான முரண்பாடுகள் தணிந்தபாடாக இல்லை.

போரில் கைக்கொள்ளப்பட வேண்டிய தந்திரோபாயம் பற்றி இராணுவத் தளபதி லெப் ஜெனரல் சிசில் வைத்தியரட்ணா மற்றும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க ஆகியோருக்குமிடையில் பலத்த கருத்து வேறுபாடுகள் இருப்பது இப்போது ஒன்றும் ரகசியமானதல்ல.

இதில் நெருக்கடி முற்றிய ஒரு வேளையில் ஆயுதப்படைகளின் பிரதம தளபதி என்ற வகையில் ஜனாதிபதி பிரேமதாசா நேரடியாகத் தலையிட்டு கூட்டுப்படைகளின் தளபதியிடமிருந்த அதிகாரங்களை முப்படைத்தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்குபகிர்ந்தளித்திருந்தார்.

எனினும் பாதுகாப்பு செயலாளருக்கும் இராணுவத் தளபதிக்குமிடையிலான கயிறிழுத்தல் போட்டி தொடர்ந்து கொண்டிருந்த நிலையில்- அதனால் போரில் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டு வந்த நிலையில் - மீண்டும் கூட்டுப்படைத்தளபதியிடம் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டன.

இந்த நெருக்கடி முற்றிய வேளையில் அதாவது கடந்த செப்டம்பரில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க வெற்றிலைக்கேணி இராணுவ முகாமை அகற்றும்படி வலியுறுத்தியமைக்கு இணங்க இராணுவத் தளபதி மறுப்புத் தெரிவித்தார்.

இத் தருணத்தில் இராணுவத்தளபதியாக தான் இருக்கும்வரையில் வெற்றிலைக்கேணியில் இருந்து இராணுவத்தினரை விலக்கிக் கொள்ள மாட்டேன் என்றும், சிறில் ரணதுங்காவின் விருப்பம் அது தான் என்றால் இப் பிரச்சினைக்காக தான் பதவி விலகத் தயார் என்றும் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணா தெரிவித்திருந்தார்.

குப் பின்னர் விமானத்தில் பீப்பாக் குண்டுகள் எனப்படும் ஜெலட்டின் குண்டுகளை எடுத்துச் செல்வது தொடர்பாக கருத்து வேறுபாடுகள் எழும்பின.

வை- 8 ரக விமானங்கள் இரண்டு விமானப்படைத் தளபதியாக வால்டர் பெர்னாண்டோ இருந்த காலத்தில் தான் சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது. எனினும் இந் நாட்டின் தேவைக்கு இது ஏற்புடையது தானா என்ற விடயம் அப்போதே கிளப்பப்பட்டது.

வை 8 ரக விமானக் கொள்வனவைத் தொடர்ந்து இத்தாலிய தயாரிப்பான சியாமாச் செட்டி விமானங்கள் எட்டு பர்மிய இராணுவத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது எனினும் பயிற்சி விமானங்களான இவை பின்னர் குண்டு வீசக்கூடியதாக மாற்றப்பட்டது எனவும், கெரில்லாப் போரை எதிர்கொள்வதற்கு இவை பயன்படக் கூடியவை அல்ல என்றும் ரெரன்ஸ் குணவர்த்தனா அபிப்பிராயம் கொண்டிருந்தார் வால்டர்பெர்னாண்டோ விமானப்படைத் தளபதியாக இருந்த போது தான் பீப்பாக் குண்டுகள் (ஜெலட்டின் குண்டுகள்) வை-8 ரக விமானத்திலிருந்து வீசப்படும் முறை அறிமுகம் செய்யப்பட்டது

இந்த விமானங்களில் ஒன்று தான் ஆனையிறவுக்கு அருகே நடவடிக்கையில் ஈடுபட்ட போது சுட்டு வீழ்த்தப்பட்டது இந்த விமானம் விழுந்து நொருங்கியமை தொடர்பாகவும், இதிலிருந்த அதிகாரிகள் கொலையுண்டமை தொடர்பாகவும் பல்வேறுவாதப்பிரதிவாதங்கள் தற்போதும் உண்டு. இது தொடர்பான புலனாய்வு அறிக்கைகள் பகிரங்கமாக வெளியிடப்படாத போதும், பீப்பாக் குண்டுகள் விமானத்தில் எடுத்துச் செல்லப்படுவதற்கு விமானப்படைத் தளபதி ரெரன்ஸ் குணவர்த்தனா தடைவிதித்து இருந்தார். கூட்டுப் படைத்தலைமையிடம் மீண்டும் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கும் நிலையில் மீண்டும் பீப்பாக் குண்டுகள் விமானத்தில் எடுத்துச் செல்வது பற்றி ஆலோசித்து வருகின்றது இங்கும் ''புக்காரா'' விமானங்களா அல்லது ''ரியூகானோ'' விமானங்களா கொள்வனவு செய்யப்படுவது என்பது பற்றி வாக்குவாதங்கள் தோன்றியுள்ளது. ''புக்காரா'' விமானத்தை இழிவுபடுத்துவோர் அதன் உற்பத்தி 1986க்குப் பின்னர் வீழ்ச்சி கண்டிருப்பதாகக் கூறுகின்றனர்.

இராணுவ ஆய்வாளர்கள் மேலும் அவ்வப்போது எழும் பல்வேறு முரண்பாடுகள் பற்றிக் கவனம் செலுத்த வேண்டியவர்களாகியுள்ளனர். உயர் மட்டத்திலேயே இத்தகைய முரண்பாடுகள் தோன்றுவது இங்கு கவனிக்கத்தக்கது. இத்தகைய கவனமானது அரசாங்கம் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு என்ன தீர்வை முன்வைக்கப் போகின்றது என்ற கேள்விக்கு இட்டுச் செல்வது தவிர்க்க முடியாததாகும்.

இவ்விடத்தில் அக்டோபர் 7 ஆம் திகதி முப்படைத்தளபதி மற்றும் பொலிஸ்மா அதிபரிடமிருந்து அதிகாரங்களை மீளப்பெற்ற நிலையில் பாதுகாப்பு அதிகாரிகள் மாநாடு ஒன்றில் ஜெனரல் வணசிங்கா கூறிய கருத்துக்கள் ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டியவை ஆகும்.

அரசாங்கம் முன்வைக்கும் அரசியல் இலக்குகளுக்கு முன்னுரிமை அளித்து நீண்டகால அடிப்படையில் திட்டமிட்டு போதிய கவனமுடன் எதிர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது, யுத்த முயற்சிகளைத் தொடர்வது பற்றிய அவரது கருத்தாக இருந்தது.

எனினும் வடக்குக் கிழக்குப் பகுதியில் போரைத் தொடர்வது குறித்து அரசாங்கத்தின் அரசியல் இலக்கு என்ன என்பது இன்னமும் பொதுமக்களுக்கு தெளிவாக்கப்படவில்லை. வணசிங்கவின் கூற்று ஏதோ ஒன்றைச் சுட்டிக் காட்ட முயல்கின்றது. அது போர் என்றால் போர் என்ற முழக்கம் போல இருப்பினும், திரைமறைவில்சில முயற்சிகள் தீர்வொன்றைநோக்கிதொடர்வதையும் கோடி காட்டுகின்றது எனலாம்.

### கிழக்கு நிலைமைகள்

புதிய பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட நிலையில் சில இராணுவ வெற்றிகள் குறுகிய காலத்தில் ஈட்டப்பட வேண்டும் என்று விளக்குகின்றார் வணசிங்கா. இவ்விடத்தில் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டுவது சுவாரஸ்யம் மிக்கது ஆகும்.

''கிழக்கு மாகாணம் துப்புரவு செய்யப்பட்டு தேர்தல் ஒன்றை நடத்தக்கூடிய வகையில் ஸ்திரத்தன்மை மிக்கது ஆக்கப்பட வேண்டும்'' என்பது ஜெனரல் வணசிங்காவின் முதல் இராணுவ இலக்காகியுள்ளது.

வணசிங்காவின் மறுவார்த்தைகளிலேயே அரசாங்கமும் கடினமான இராணுவ நடவடிக்கை பற்றிப் பேசுகின்றது.

1993ஜனவரியில் திருக்கோணமலையிலும், அதன்பின்னர் மட்டக்களப்பிலும் நடமாடும் ஜனாதிபதி செயலக சேவை நடத்தப்பட வேண்டுமெனவும், அதற்கேற்றவிதத்தில்தள நிலைமைகள் உருவாக்கப்பட வேண்டுமெனவும் வணசிங்காவிற்கு பணிப்புரை விடுக்கப்பட்டிருக்கின்றது.

எனினும் ஆய்வாளர்களின் கூற்றுப்படி பார்த்தால், திட்டமிட்ட வகையில் இராணுவ நடவடிக்கைகள் தொடரப்பட்டு, துப்புரவு செய்யப்பட்ட நிலையில் ஜனாதிபதி செயலக சேவை இடம் பெறலாம். ஆனால் அரசாங்கத்தின் அரசியல் இலக்கு என்ன என்பது பற்றி அப்போதும் தெளிவாக்கப்பட போவதில்லை என்பதும் விரைவான இராணுவ வெற்றி என்பதை உள்ளடக்கப்போவதில்லை என்பதும், 'நீண்டகால அடிப்படையிலான அரசியல் இலக்குகளுக்கு முன்னுரிமை கொடுத்து போதிய கவனமுடன் திட்டமிட்டு இராணுவ நடவடிக்கை எடுக்கப்படுதல்'' என்பதன் மூலம் நன்கு தெளிவாகின்றது.

ஜெனரல் வணசிங்காவின் தலைமையின்கீழ் இராணுவம், கடற்படை, விமானப்படை, மற்றும் பொலிஸ் ஆகியன கொண்டு வரப்பட்டிருக்கும் நிலையில், அவர் தனக்குக் கீழான அதிகாரிகளுக்கு எல்லா நிலைமைகளையும்ஒரே இடத்தில் விபரிக்க முடியாது என்பது உண்மைதான்.

எனினும் அரசாங்கம் தனது அரசியல் இலக்குகளை தெளிவாக முன்வைக்குமானால் அது படையினர் தாம் ஏன் போராடுகின்றோம் என்பதைப் புரிந்துகொள்ள துணை செய்யும். இது இராணுவ உயர் மட்டத்தில் ஐக்கியம் ஏற்படுவதற்கும் பெரும் துணை புரியக்கூடும் என்பதுடன் எமது வரலாற்றின் பேரழிவு தரும் காலத்தை விரைவாகமுடிவுக்கு கொண்டு வருவதற்கும் உதவும்.

நன்றி:

-சண்டே ரைம்ஸ்

பொஸ்னியா குறித்த

# மேற்துலகின் நிலைப்பாட்டால் மற்றொரு பாலஸ்தீனம் உருவாகும்

## ஈரானிய ஜனாதிபதி கண்டனம்

(நிக்கோஸியா)

பொஸ்னியாவில் ...

வில் இன்னுமொரு பாலஸ் ... காரச் சக்தி என்று வர்ணித்த

இருந்து குண்டு வீசுவதுவரை அவற்றின் பயன்பாடு உள்ளது. அத்தோடு, பல சரக்குக் கப்பல்களைக் கூட சிறிலங்கா அரசாங்கம் யுத்தக் கப்பல்களாக மாற்றியமைத்துள்ளது. மேலும் கவசவாகனங்களின் விநியோகம் போரில் நேரடியாகத் தொடர்புபடாது என்ற பிரிட்டனின் கூற்று எதை அடிப்படையாகக் கொண்டது என்பது புரியவில்லை.

அதாவது, பிரிட்டனின் நிலைப்பாடு. குண்டுகளை விநியோகிக்க மாட்டோம். ஆனால் குண்டுகளைக் காவிச்செல்லும் போர்த் தளபாடங்களை விநியோகிப்போம் என்பதாகவுள்ளது இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகள் ஏவுகணைத் தொழில்நுட்பத்தில் முன்னேறினால் அவற்றை [ஏவுகணைகளை] கொண்டு அணு ஆயுதத்தை அந்நாடுகள் எதிரி நாடுகள் மீது ஏவி விடும் என வாதிடும் பிரிட்டன் போன்ற நாடுகள் குண்டு அனுப்பாமல் குண்டுகளை ஏற்றும் வாகனங்களை அனுப்புவது என்பதை எந்தவகையில் சேர்த்துக் கொள்கின்றன என்பது கேள்விக்குரியதே.

மேலும் சிறிலங்கா அரசாங்கம் உலகிலேயே மனித உரிமை மீறலில் முதலிடம் வகிக்கும் நாடென சர்வதேச மனித உரிமை ஸ்தாபனத்தின் தலைவர் பகிரங்கமாகவே குற்றம் சாட்டியுள்ளார். இந்நிலையில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஆயுத விநியோகம் செய்யத் தீர்மானித்துள்ள பிரிட்டன் அரசாங்கம் மனித உரிமைகள் தொடர்பாக சிறிலங்கா அரசின் நடவடிக்கையை அவதானித்தே விநியோகத்தைத் தொடர்வதா என்பது குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது. அதாவது முடிந்ததெல்லாம் இறந்த காலம் எனப் பிரிட்டன் தீர்மானித்துள்ளது போல் தெரிகின்றது.

இதேவேளைபிரிட்டன்ஆயுதம்விநியோகிக்காதுவிட்டாலும் சிறிலங்கா போரை நிறுத்திவிடப் போவதில்லை. ஆனால், உலகில் உள்ள வேறு நாடுகள் சிறிலங்காவிற்கு ஆயுதம் விநியோகிப்பது வேறு விடயம். பிரிட்டன் விநியோகிப்பது வேறு விடயம். ஏனெனில், இலங்கையில் இன்று இரத்த ஆறு ஓடுவதற்கு பிரிட்டனே முக்கிய பொறுப்பாளி இருவேறு இனங்களை தமது வசதிக்காக ஒரே நிர்வாக அமைப்பிற்குள் கொண்டு வந்தவர்கள் ஆங்கிலேயர்கள் அத்தோடு பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்டு இரு இனங்களுக்கிடையிலும் பகைமையை வளர்த்தவர்கள் அவர்கள். ஆகையினால் இப்பிரச்சினைக்கு காரணமானவர்கள் ஆங்கிலேயர்களே இந்நிலையில் இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டிய தார்மீகக் கடமை பிரிட்டனுக்கு உண்டு. ஆனால் பிரிட்டனின் ஆயுத விநியோக முடிவு இதற்குக் குந்தகமானது.

சினைக் ாக தான் பதவி விலகத் தயார் என்றும் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணா தெரிவித்திருந்தார்.

இந்த நெருக்கடி தீரும் முன்பாகவே ஜனாதிபதி பிரேமதாசா மீண்டும் கூட்டுப் படைத் தலைமையிடம் அதிகாரங்களைக் கையளித்ததும், முப்படைகளின் தளபதிகளும் பிரதமர் டி. பி. விஜயதுங்காவைச் சந்தித்து பதவி விலகுவதற்கான தமது விருப்பத்தை வெளியிட்டனர். இதில் டி. பி விஜயதுங்காஎந்தப் பாத்திரமும வகிக்காதவர் என்பது வேறுவிடயம்.

இந்தப் பிரச்சினைகள் இராணுவத்திற்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் இடையிலானதாக மட்டும் இப்போது இல்லை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான சிறில் ரணதுங்க இராணுவத்தில் பிரிகேடியர் தரத்தில் இருந்து ஓய்வு பெற்றவர் என்பதும் பின்பு கூட்டுப்படைத் தளபதியாக இருந்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்போது விமானப்படைத் தளபதியான ஜெனரல் குணவர்த்தனாமற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் வால்டர் பெர்னாண்டோ ஆகியோருக்கிடையிலான முரண்பாடும் வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்துள்ளது. வால்டர் பெர்னாண்டோ முன்பு விமானப்படை தளபதியாக இருந்தவர் ஆவார்.

ரணதுங்கவின் உதவியாளராக பாதுகாப்பு அமைச்சில் கடமைபுரியும் வால்டர் பெர்னாண்டோவிற்கும், விமானப் படைத் தளபதிக்குமிடையிலான முரண்பாடுகள் எத்தகைய விமானங்களை கொள்வனவு செய்வது என்பது முதல் அவற்றை எப்படிப் பயன்படுத்துவது என்பது ஈறாக விரிவு பெற்றுள்ளது.

## வை-8 விமானச் சர்ச்சை

திருமலை சீனன் குடாவில் ஏற்பட்ட குண்டுவெடிப்பிற்

கள் ஒப்படைக்கப்பட்டிருக்கும் நிலையில் மீண்டும் பீப்பாக் குண்டுகள் விமானத்தில் எடுத்துச் செல்லப்படவும், வீசப்படவும் நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன.

## எப்- 7ரக விமானக் கொள்வனவு

தொழில் நுட்ப முன்னேற்றம் காரணமாக உலகில் கைவிடப்பட்டிருக்கும் எப்-7 ரக விமானங்கள் கொள்வனவு செய்யப்படுவது தொடர்பாகவும் சர்ச்சைகள் கிளம்பியுள்ளன. ஆயிரம் கோடி ரூபா பெறுமதிமிக்க இந்த எப்-7 ரக ஜெட் விமானங்கள் ''முக்கியமான ஆபரணங்கள்'' போலவே இங்கு தொழிற்படும் என்று சொல்லப்படுகிறது.

இத்தகைய ஜெட் விமானங்கள் வான் பரப்பில் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே பயன்படலாம். விடுதலைப்புலிகளிடமிருந்து நிலத்தை மீளப் பெறவே யுத்தம் நடத்தப்படுவதும், வான் பரப்பிற்கு விடுதலைப்புலிகளிடமிருந்து பெரும் அச்சுறுத்தல் இல்லை என்பதும் இங்கு கவனிக்கத் தக்கது.

இந்தியா போன்ற ஒரு நாட்டினிடமிருந்து எமது வான்பரப்பிற்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தலை தவிர்க்கவே எப்-7 ரக விமானம் பயன்படக்கூடும் என்றும், எனினும் இந்தியாவிடமிருக்கும் வானிலிருந்து வானுக்கு ஏவுகணை செலுத்தவல்ல மிக்- 29 மற்றும் பிராஞ்சிய மிராஜ், பிரிட்டனின் ஜாக்குவார், மற்றும் விமானந்தாங்கிக் கப்பல்களுடன் ஒப்பிடுமிடத்து இதன் பயன் மிகச் சிறியது ஆகும்.

மேலும் சில இராணுவ ஆய்வாளர்கள் பல உலங்கு வானூர்திகளே எமது தேவை எனக் கருதுகின்றனர். தற்போது ஆர்ஜென்டீனாவில் இருக்கும் விமானப்படைஅணியொன்று ''புக்காரா'' ரக விமானங்கள் கொள்வனவு

# ஈரானிய ஜனாதிபதி கண்டனம்

(நிக்கோஸியா)

பொஸ்னியாவில் முஸ்லிம்களை எதிர்த்து சண்டையிடும் சேர்பியர்களுக்கு மேற்குலக நாடுகள் உதவியளிப்பதானது பாலஸ்தீனத்து நெருக்கடியைப் போன்று பொஸ்னியாவில் இன்னுமொரு பாலஸ்தீனத்தை உருவாக்குவதாக அமையுமெனஈரானிய ஜனாதிபதி அலி அக்பர் ஹஷெமி ரப்சன் ஜானி குற்றம் சாட்டியுள்ளார்.

மேற்குலக நாடுகளை அகங்காரச் சக்தி என்று வர்ணித்த அவர் பாலஸ்தீனத்தில் சியோனிஸ்டுகள் கையாண்ட உபாயத்தைப் போன்றே பொஸ்னியா—ஹெர்சகோவினாவில் சேர்பியர்களும் இனப்படுகொலை முறைகளை கையாளுகின்றனர் என்று குறிப்பிட்டார்.

பொஸ்னியா-ஹெர்சகோவினாவில் பாலஸ்தீன நெருக்கடியைப் போன்ற இன்னொரு நெருக்கடியை உருவாக்க முடியுமென்று மேற்குலகத்தவர்கள் கற்பனை செய்கிறார்கள். அப்படியொரு எண்ணம் இருந்தால் அது ஒரு பாரதூரமான தவறாகவே அமையும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# ரஷ்யா - பிரிட்டன் நட்பு உடன்படிக்கை

(லண்டன்)

ரஷ்யாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையில் உறவுகளை புதுப்பிக்கும் விதத்தில் நேற்று முன்தினம் இருநாடுகளும் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஜோன் மேயரும் ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்சினும் இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

1766 ஆம்ஆண்டிற்குப் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத் தக்கது.

அமைதியான நட்புறவுக்கும் பொருளாதார ஒத்துழைப்புக்குமான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு சர்வதேச பந்தோபஸ்தைஏற்படுத்திக் கொடுத்தல் என்பதற்கு இந்த உடன்படிக்கையில் வகை செய்யப்பட்டுள்ளது.

இவ் உடன்படிக்கை மூலம் இருநாடுகளுக்கும் இடையிலான பகைமைஉணர்வுகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்சின் தெரிவித்தார்.

இதேவேளை பொருளாதார விவகாரங்கள், இருநாட்டுத் தலைவர்களுக்கும் இடையே நேரடித் தொலைத்தொடர்பு வசதிகள், இராணுவ ஒத்துழைப்பு, விமானக்கடத்தல், அணு ஆயுதம் அனுப்பப்படுதலை எதிர்த்து சமாளித்தல் என்பன போன்ற வேறு பல உடன்படிக்கைகளிலும் பிரிட்டிஷ்- ரஷ்ய அமைச்சர்கள் கையெழுத்திட்டனர்.

# ஜேர்மன் யூதர்களுக்கு நட்டஈடு வழங்க முடிவு

(பொன்)

ஜேர்மனியில் நாஸிகளின் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்ட யூதர்களுக்கு இந்நூற்றாண்டின் இறுதியில் 63 கோடி டொலர் வரை வழங்க ஜேர்மனி இணக்கம் தெரிவித்துள்ளது.

நாஸிகளின் துன்புறுத்தல்களுக்கு இலக்கான யூதர்களுக்கு ஆகக் குறைந்த நட்டஈடுகள் கூட முன்னர் கொடுக்கப்படவில்லை.

நாஸிகளின் தடுப்பு முகாம்களில் சிறைவைக்கப்பட்டவர்களே இந்த நட்டஈட்டைப் பெறத் தகுதியுடையவர்கள் எனவும் இவர்களுக்கு எதிர் வரும் ஜனவரி மாதம் தொடக்கம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜேர்மன் நிதியமைச்சும் உலக யூத காங்கிரசும் கடந்த வாரம் ஜேர்மன் தலை நகரான பொன்னில் இதற்கான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளனர்.

# இந்தியாவில் பணவீக்கம் குறைக்கப்படும்

(டில்லி)

இந்தியாவின் 10.03 சதவீதமாக இருக்கும் பணவீக்கத்தினை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் 8 சத வீதத்திற்குக் குறைக்கப்படும் என இந்திய அரசு அறிவித்துள்ளது.

பெற்றோலிய பொருள்கள் இரசாயனப் பொருள்கள் அண்மையில் உயர்ந்த தனை அடுத்து இப்பணவீக்கம் அதிகரித்துள்ளதாகப் புதுடில்லியில் நிதியமைச்சக அதிகாரி ஒருவர் செய்தியாளரிடம் பேசும் போது தெரிவித்தார்.

# ஈரானிய அமைச்சர் இந்தியா விஜயம்

ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அலிஅக்பர் வெலயாத்தி உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் புதுடில்லி வந்துசேர்ந்தார். இந்தியவெளியுறவுத்துறை இணை அமைச்சர் ஆர். எல். பாட்டியாவுடன் இணைந்து ஈரான் - இந்திய கலப்பு பொருளாதாரக் குழுக் கூட்டத்தின் ஆறாவது சுற்றுப் பேச்சுக்களின் இணைத் தலைவராகச் செயற்படவுள்ளார்.

ஈழநாதம்

# ராணுவம் பலியாகும் போது கிரிக்கட் விளையாடுகிறீர்கள்

**-தினேஷ் குணவர்த்தனா**

எமது இளம் இராணுவத்தினர் கொல்லப்படும் போது எந்தக் கவலையுமின்றிக் கிரிக்கட் விளையாடிக் கொண்டிருக்கின்றீர்கள் என்று பாராளுமன்றத்தில் தினேஷ் குணவர்த்தனா எம். பி. குற்றம் சாட்டினார்.

நீதி அமைச்சுக்கான குறை நிரப்பு மதிப்பீட்டுப் பிரேரணையில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; எல்லா விழாக்களும் நிறுத்தப்பட வேண்டும். பெரஹராக்களை நிறுத்தும்படி பிக்குகளிடம் கேட்கப்பட வேண்டும் எல்லா வகையான களியாட்டங்களும் நிறுத்தப்பட்டு போரிடும் இராணுவத்தினருக்கு மன உற்சாகம் ஏற்படுத்தப்பட வேண்டும். அது இல்லாமல் விடுதலைப் புலிகளுடன் இரகசியப் பேச்சுத்தான் 'உங்கள் பதில் என்றால் நாடு பேரழிவைத்தான் சந்திக்கும் என்றும குறிப்பிட்டார்.

## ஜயபார நடவடிக்கை எதனையும் சாதிக்கவில்லை

**-வெரித்தாஸ் கருத்து**

[மணிலா]

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில்சிறிலங்கா ராணுவம் எடுத்த 'ஜயபார' இராணுவ நடவடிக்கை எதனையும் சாதித்து விடவில்லை என வெரித்தாஸ் வனொலி தெரிவித்தது. இந்நடவடிக்கையால் விடுதலைப் புலிகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை என அது மேலும் தெரிவித்தது.

இந்நடவடிக்கை காட்டு ஓரங்களில் மட்டுமே நடாத்தப் பட்டது என்றும் தெரிவித்தது.

## மூழ்கிய கந்துல கப்பலை கரைக்குகொண்டுவரமுயற்சி

சற்பிட்டி கடற்படை முகாமிற்கு அப்பால் கடலில் மூழ்கிப் போன கந்துல கப்பலை கற்பிட்டி முகாமிற்கு இழுத்து வருவதற்கான முயற்சியில் கடற்படையினரும், கொழும்பு துறைமுக அதிகார சபையினரும் இரவு பகலாகக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஒரு மாதத்திற்கு முன்னர் இக்கப்பல் மூழ்கிய இடத்தைச் சுற்றிக் கடற்படையினரின் ரோந்து படகுகள் சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருக்கின்றன.

அத்துடன் கடற்படையில் கந்துலவின் இடத்தை நிரப்புவதற்காகப் புதிய கப்பல் ஒன்றை வாங்குவதற்கான முயற்சியில் கடற்படையினர் மேற்கொண்டுள்ளனர் எனவும், இதற்காக உயர்மட்டக் குழுவொன்று விரைவில் வெளிநாடொன்றுக்குச் செல்லவுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

## மரண அறிவித்தல்கள்

### திரு. தங்கராஜா சிவலிங்கம்

திரு. தங்கராஜா சிவலிங்கம் (முகாமையாளர், மக்கள் வங்கி, பருத்தித்துறை) அவர்கள் 10 - 11 - 92 (நேற்று) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தா. தங்கராஜா பாலரத்தினம் ஆகியோரின் அன்பு மகனும், மதியாபரணத்தின் அன்புக் கணவரும், சிவறஞ்சினி, மனோறஞ்சன், சிவகலா, மதிவண்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சேதுநாதபிள்ளை, சிவனடியார் (இளைப்பாறிய முகாமையாளர் விற்பனைத் திணைக்களம்), இந்திராணி, தாமோதரம்பிள்ளை (இளைப்பாறிய முகாமையாளர், விற்பனைத் திணைக்களம்) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, திலகவதி, இராமச்சந்திரன் (கணக்காளர், கச்சேரி வவுனியா) சாரதா ஆகியோரின் மைத்துனரும், விநாயகமூர்த்தி (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர்) அவர்களின்

### பொதுப்பரீட்சை

பிரபல்ய பாடசாலைகளில் ஆண்டு 6 வகுப்புக்குப் புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்கான பொதுப்பரீட்சை இம் மாதம் 16 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் என்றும் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். இந்துக்கல்லூரி, வேம்படி மகளிர்கல்லூரி ஆகிய இரண்டு பாடசாலைகளினதும் அனுமதிப் பரீட்சைகள் இம் மாதம் 15 ஆம் திகதி நடைபெறும். (42)

### ஒளி விழா

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ரதிலஷ்மி மண்டபத்தில் இன்று காலை ஒன்பது மணியளவில் ஒளி விழா நடைபெறவுள்ளது. வண. டி. தியாகராசாவின் சிறப்புரையுடன் இசை அஞ்சலி, தீபாஞ்சலி, கீதாஞ்சலி, நர்த்தனாஞ்சலி என்பனவும், மூவி ராசாக்கள் நாட்டுக்கூத்தும் இடம்பெறவுள்ளன.

# புலிகள் நிலைப்பாட்டை அறிய குழு ஒன்று யாழ். வருகிறது

**கொழும்பு பத்திரிகை தகவல்**

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ள குழுவொன்றை அனுப்புவது குறித்து பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைமை ஆலோசித்து வருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இக்குழு இரண்டு வாரங்களுக்குள் யாழ். செல்லலாம் எனவும் அது தெரிவித்துள்ளது

மங்கள முனசிங்கா தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக்குழு இனப்பிரச்சினை தீர்வு ஏற்படவேண்டுமானால் அரசியல் தீர்வாக சமஷ்டி யோசனையை முன் வைப்பதற்கே ஆலோசனை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தெரிவுக்குழுவின் தலைவர் மங்களமுனசிங்காமுன்வைத்த ''உச்ச சபை'' யோசனையை தயாரித்த குழுவில் இடம் பெற்ற பேராசிரியர் ஜயதேவ உயன்கொட உட்பட பல உறுப்பினர்களும் சமஷ்டி முறையையே முன் வைக்குமாறு வலியுறுத்தி வருகின்றனர்.

## தெரிவுக்குழுவிலிருந்து விலக இ. தொ. கா. ஆலோசிக்கும்

**- தொண்டமான் தெரிவிப்பு**

[கொழும்பு]

பாராளுமன்ற தெரிவுக் குழுவினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தை திட்டவட்டமாக நிராகரித்திருக்கும் அமைச்சர் தொண்டமான் இவ்வாறே தொடருமானால் தெரிவுக் குழுவிலிருந்து தானும் தனது கட்சியும் வெளியேறுவது பற்றி ஆலோசிக்க நேரும் என்று கூறியுள்ளார்.

அக்டோபர் 27,1992 எனத் திகதியிட்டு பாராளுமன்ற தெரிவுக் குழுத் தலைவர் மங்கள முனசிங்கவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் மேலும் கூறியிருப்பதாவது

இன உறவுகள் மீண்டும் சீராக்க முடியாத நிலைக்கு இட்டுச் செல்லவும் இணக்கம் காணும் போக்கிற்கு கதவு மூடுவதற்குமே இது பயன்படும் என்பதால் இத் தீர்வுத் திட்டம் ஒரு தீர்வாகாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## வாணிப, தொழில் முயற்சிகளை பதிவுசெய்தல் கால அட்டவணை

| வாணிபம் / தொழில் தன்மை | கரவெட்டி உ. அ. அ பிரிவு | வடமராட்சி கிழக்கு உ. அ. அ. பிரிவு | பச்சிலைப்பள்ளி உ. அ. அ. பிரிவு |
|---|---|---|---|
| பவுண், பொன், வெள்ளி நகை வாணிபம் நகை உற்பத்தித் தொழில், அடவு கடை | 12-11-92 முதல் 15-11-92 வரை | 19-11-92 முதல் 21-11-92 வரை | 19-11-92 முதல் 21-11-92 வரை |
| பலசரக்கு வாணிபம் | ,, ,, | ,, ,, | ,, ,, |
| புடைவை வாணிபம் | ,, ,, | ,, ,, | ,, ,, |
| கட்டிடப் பொருள் மின்சார உபகரணங்கள் மோட்டார் உதிரிப்பாக வாணிபம் | 16-11-92 முதல் 18-11-92 வரை | ,, ,, | ,, ,, |
| விடுதிகள் / மதுபானச்சாலை தேநீர்சாலை | ,, ,, | ,, ,, | ,, ,, |
| தொழில் நிறுவனங்கள் | ,, ,, | ,, ,, | ,, ,, |
| உயர் தொழில் / கண்ணியத் தொழில் | ,, ,, | ,, ,, | ,, ,, |
| ஏனையவைகள் | ,, ,, | ,, ,, | ,, ,, |

**விண்ணப்பப்படிவங்கள் வழங்கும் இடங்கள் வருமாறு**

1. கரவெட்டி உ, அ, அ. பிரிவு — வடமராட்சி வருவாய்ப்பகுதி செயலகம்
2. வடமராட்சி கிழக்கு உ, அ. அ. பிரிவு — வடமராட்சி வருவாய்ப்பகுதி செயலகம்
3. பச்சிலைப்பள்ளி உ. அ. அ. பிரிவு — தென்மராட்சி வருவாய்ப்பகுதி செயலகம்

### 97 வீதமான

உள்ளதனால்கூடியளவு இரும்பு சத்துள்ள உணவுவகைகளை உண்ண வேண்டும் என்றார்.

குழந்தைபிறந்ததில் இருந்து 5 வயது வரை 56 சதவீதமான குழந்தைகளின் நிறை குறைவுஇதுமூன்றாம்தர நிலையில் காணப்படுகின்றது வயது கூடக்கூட இதன் வீதம் அதிகரிக்கின்றது. இதனால் பிள்ளைகளுக்கு மந்த போசாக்கு நோய் காணப்படுகிறது

மந்த போசாக்கினால் இவர்களின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக காணப்படுவதினால் வெகு இலகுவாக குழந்தைகள் தொற்று நோய்க்கு உள்ளாவதாகவைத்திய அதிகாரிமேலும் தெரிவித்தார்.

## "மாவீரர் படிப்பகம்"

### புலிகளை

திக்கவில்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்

அத்துடன்கடைசிநிலைவரப்படி பார்த்தால் வடக்கில் கூட்டுப் படைகளின் இறுதித் தாக்குதல் திட்டமொன்று ஏறத்தாழ கைவிட்டது போலாகியிருக்கிறது என்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகளைப் பாதிக்கக் கூடிய எந்த இராணுவநடவடிக்கையயும் மேற்கொள்வதற்கு அரசியல் தலைப்பீடம் தயாராக இல்லைஎனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்குகிழக்கு யுத்தத்தை நடத்த வருடமொன்றுக்கு 2 பில்லியன் ரூபா தேவைப்படுவதால் புலிகளுக்கு எதிரான இந்தயுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்று அமைச்சர்கள் சிலர் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருவதாகவும்,

யுத்த முனைக்கு அவ்வப்போது இராணுவ அதிகாரிகள் மேற்கொள்ளும் உத்தியோக பூர்வ விஜயங்களை அரச கட்

### கிழக்கு

பகுதி பலப்படுத்தப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகின்ற போதும் புலிகளின் தாக்குதல்களைத் தடுக்க அவர்களால் இயலவில்லை என்றும், தாக்குதல் நடந்த பின்னராவது அவர்களைச் சூழ்ந்து மடக்க முடியவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

### வீரச்சாவு

லைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### தேசிய

தாஸ் தலைமையில்ஒரு விசேட இராணுவப் பிரிவு அமைக்கப்படவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன, இந்திய இராணுவத்தால் அமைக்கப்பட்ட தமிழ் தேசிய இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் இந்தப் படைப்பிரிவில் சேரவுள்ளார்களாம் தற்சமயம் ஒரிசா மாநிலத்தில் முகாம்களில் தங்கியுள்ள முன்னாள் தேசிய இராணுவத்தினர் படையில் சேர விருப்பம் தெரிவித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன

### அம்பாறை

பேரை மேல்விசாரணைக்காக முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

அக்கரைப்பற்று முகாம் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போது 60க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 30 பேர் வரை மேல்விசாரணைக்காக இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர்) அவர்களின் சகலனும், செல்வராஜா (பொறியியலாளர்) அவர்களின் மாமனாரும், கணபதிப்பிள்ளை, புஸ்பராணி, செல்வானந்தம், உதயகுமார், சிவகுமார், சின்னராஜன், சேதீஸ்வரன், ஜெகதீஸ்வரன், பத்மாசனி, சரவணபவதீஸ்வரன், சிவரூபி, சிவராணி, சிவகுமார், சிவரூபன் ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 11 - 11 - 92 (இன்று) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் குடும்ப மயானத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

''சிவமதி''
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

தகவல்;
சி. மதியாபரணம்
[மனைவி]

[3404]

## பொன்னையா தங்கம்மா

புலோப்பளையைச் சேர்ந்த பொன்னையா தங்கம்மா (10 - 11 - 92) நேற்று காலமானார். இவர் காலஞ்சென்ற நமசிவாயம் பொன்னையா (சங்கம்) வின் அன்பு மனைவியும், சுப்பிரமணியத்தின் (சுவிஸ்) அன்புத் தாயாரும், கமலாதேவியின் அன்பு மாமியாரும், துஷ்யந்தி, ராஜந்தி, மயூரன், மகினன், பிரியந்தி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (11 - 11 - 92) இன்று முற்பகல் 11.00 மணியளவில் பொன் அகத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

''பொன் அகம்''
புலோப்பளை
பளை.

தகவல்:
சு. கமலாதேவி
(மருமகள்)

[3624]

## திருமதி பத்தினி தம்பையா

அனலைதீவைச் சேர்ந்த திருமதி பத்தினி தம்பையா (07 - 11 - 92) சனிக்கிழமை இந்தியாவில் காலமானார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றேன்.

K. K. S. வீதி,
கோண்டாவில்.

தகவல்:
த. அரியரத்தினம்
[மகன்]

[3623]

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

## "மாவீரர் படிப்பகம்"

# இடமாற்றம்

வாசகர்களின் நன்மை கருதி மேற்படி எமது படிப்பகம் பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு என்ற முகவரியிலிருந்து

## பலாலிவீதி, கோண்டாவில்

என்ற முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள . இப்படிப்பகத்தில் நூல்களைப் பெற்றுக் கொண்ட அனைத்து வாசக நண்பர்களும் தாங்கள் எடுத்துள்ள நூல்களை மேற்படி முகவரியிலுள்ள எமது படிப்பகத்தில் ஒப்படைக்கவும்.

★ இரவல் கொடுத்துதவும் பகுதி

★ சிறுவர் பகுதி.....போன்றவை

வழமைபோல் சேவையாற்றும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

குறிப்பு:- போராளிகளின் நினைவு பிரசுரங்களை எமது தற்போதைய முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மாவீரர் படிப்பகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்.

– நூலகர்
(3622)

## தொழில் நுட்பக்கல்லூரி - யாழ்ப்பாணம்
## கல்வியாண்டு - 1993

எமது கல்லூரியின் 1993 ஆம் கல்வியாண்டிற்கான பகுதிநேர விரிவுரையாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மாதிரி விண்ணப்பப் படிவத்தினையும், பாடவிபரங்களையும் கல்லூரியில் பார்வையிடலாம். விண்ணப்பதாரர்கள் தாமே படிவங்களைத் தயாரித்து அதனை, அதிபர். தொழில் நுட்பக்கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 1992. 11. 27க்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தொழில்நுட்பக் கல்லூரி,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
1992 11. 10

– அதிபர்.

(சி/5387)

பூர்வ விஜடங்களை அரசகட்டுப்பாட்டில் உள்ள ரூபவாஹினியில் அதிகாரிகளின் யுத்த முனை விஜயங்களைக் காட்டுவதும் புலிகளை வெற்றிகொள்ள உதவாது என்றும் அக்கட்டுரையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வடக்கு பறி

க்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கோரியுள்ளார். இது தொடர்பாக கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுடன் தயான் ஜெயத்திலக்காபேச்சுக்களை தொடக்கியிருப்பதாகவும், இரண்டு குழுக்கள் தயானின் யோசனைக்கு ஏற்கனவே இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

பொலிஸ்

நேரடிக் கட்டுப்பாட்டில் செயற்பட்ட இப்பிரிவு பின்னர், தேசிய புலனாய்வு பணியகம் அமைக்கப்பட்டதை தொடர்ந்து செயலிழந்ததுதெரிந்ததே

வடக்கு

யங்களில் பொலிஸ் அதிகாரிகளோ உத்தியோகத்தர்களோ ஆறுமாதங்களுக்கு மேல் கடமையாற்ற வேண்டியதில்லை.அக்காலம் முடிந்தவுடன் அவர்கள் கட்டாயம் அங்கிருந்து இடமாற்றம் செய்யப்படல் வேண்டும் அவர்களின் இடங்களுக்கு நாட்டின் ஏனைய பகுதிகளில் கடமையாற்றும் பொலிசார் கட்டாயமாகச் செல்லவேண்டும் என்றும் அவர் நாட்டிலுள்ள சகல பிரதிபொலிஸ்மாஅதிபர்கள் பொலிஸ் சுப்பிரின்டன்கள் ஆகியோருக்கு அறிவித்துள்ளார்.

அலங்கார

ஆகியவற்றின் பிரதான சந்திகள் தோறும் மாவீரர் வளைவுகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன, பலாலி வீதியின் இருமருங்கும் துப்புரவு செய்யப்பட்டு மரக்கன்றுகளை நாட்டி அவற்றை பாதுகாக்கும் பணியில் அவ்வப்பகுதி மக்கள் ஈடுபட்டிருப்பதை அவதானிக்க முடிந்தது, (ச

கின்றனர்.

துவைக்கப்பட்டுள்ளனர்.

## மரண அறிவித்தல்
## அம்பலவாணர் அமிர்தலிங்கம்
(ஐயாத்துரை, முன்னாள் வர்த்தகர்)

மந்துவிலைப் பிறப்பிடமாகவும், கொடிகாமம் கச்சாய் வீதியை வதிவிடமாகவும் கொண்ட அம்பலவாணர் அமிர்தலிங்கம் (ஐயாத்துரை, முன்னாள் வர்த்தகர்) நேற்று (10 - 11 - 92) செவ்வாய்க்கிழமை காலமானார். இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், சிவனேசம், சிவராசா, சிவசுதா [சுவிஸ்], சிவசாந்தி [ஆசிரியை], சிவகலா ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா, தருமலிங்கம் [சுவிஸ்], சவுந்தலா ஆகியோரின் அன்பு மாமனாரும், பாஸ்கரன், துசிகரன், துஷ்யந்தி, சுபாஸ்கரன், பிரதீபன், சஞ்சீவன் [சுவிஸ்] ஆகியோரின் அன்புப் பேரனாரும், காலஞ்சென்ற அம்பலவாணர் பாலசிங்கத்தின் சகோதரரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், இராசையா, யோகராசா [கனடா], நல்லம்மா, மகேஸ்வரி, இராசம்மா ஆகியோரின் மைத்துனரும், திருமதி இராசையா, திருமதி யோகராசா, காலஞ்சென்ற வேதாரணியம் [நெசவு ஆசிரியர்], காலஞ்சென்ற கனகரத்தினம் [இ போ ச நடத்துனர்], சண்முகலிங்கம் [கொடிகாமம் ப நோ. கூ. சங்க முன்னாள் காசாளர்] ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கச்சாய் பாவாத்தான் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

தகவல்:
அ. சிவராசா
[மகன்]

[3627]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 10-11-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 6603

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

70-7575, 71-9765, 25-7896, 40-7207, 26-6526, 24-9490, 42-2323, 27-5399, 24-5529, 26-1583, 22-6897

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்;-

28-3969, 27-4019, 27-9404, 27-4301, 28-3476, 28-3049, 26-5143, 42-3239, 27-1187, 28-2385, 42-3964, 26-0048, 24-5041, 42-3419, 24-6480, 26-1690, 27-4920, 40-0770, 28-9259, 27-9825, 24-3071.